RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s525

OPEN ACCESS

# ஈழக்கூத்தின் மீளுருவாக்கமும் திராவிடக் கருத்தியல்களின் செல்வாக்கும் - ஓர் ஆய்வு

**து. கௌரீஸ்வரன்** [அ, *]

[அ] நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# The Regeneration of Eelam Koothu and the Influence of Dravidian Ideologies-A Study

**T. Gowrieeswaran** [a, *]

[a] Department of Fine Arts, Faculty of Arts, University of the East, Sri Lanka

* Corresponding Author: gowriees@gmail.com

Received: 23-07-2021
Revised: 13-06-2022
Accepted: 01-07-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

It is necessary that the Dravidian ideas, which flourish in the South Asian background and emphasize rationality and self-respect, are disseminated at the local social levels, and rooted in local cultures. Dialogues on Dravidian ideologies are necessary to unleash the Aryan patriarchal cultural structures of inequality and create new cultures full of equality, independence, freedom, and social justice. The need and the need to take these ideas to the grassroots levels of societies, where they can be discussed, discussed, and disseminated, are realized and possible mechanisms are considered. In this way, the participatory research activity for Koothu regeneration that has been proposed and carried out since the beginning of the second millennium in Eelam is recognized as one of the possible methods that have mechanisms to bring constructive ideas to the grassroots communities. In this article, it is examined how Dravidian ideas have influenced the regeneration of such a koothu.

**Keywords:** Eelam Koothu, Dravidian ideas, Regeneration, Dialogues

## முன்னுரை

தென்னாசியப் பிராந்தியத்திலே பரந்தும் செறிந்தும் வாழ்கின்ற திராவிட இன மக்களை சிதறிச் சின்னாபின்னப்படுத்தி ஆக்கிரமித்திருக்கும் அந்நிய ஆரியப் பண்பாட்டினின்றும் விடுவித்து அவர்களைத் திராவிடத் தேசியம் எனும் ஒரு குடையின் கீழ் கொணர்ந்து பகுத்தறிவும் சுயமரியாதையும் உள்ள மனிதர்களாக வாழ்வாங்கு வாழச்செய்யும் இலக்குடன் திராவிடக் கருத்தியலும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திராவிடப் பண்பாட்டு இயக்கத்தின் உந்து விசையாக தந்தை பெரியார் என அறியப்படும் ஈ.வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் விளங்கியுள்ளார். தந்தை பெரியாரின் பேச்சுக்கள், எழுத்துக்கள், செயற்பாடுகள் ஊடாகத் திராவிடக் கருத்தியல்களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. தந்தை பெரியாரும் அவரூடாக முகிழ்த்த திராவிடக் கருத்தியல்களும் தென்னாசியாவின் சமூக, அரசியல் பண்பாடுகளின் வரலாற்றில் இன்றுவரை நுண்ணளவிலும், பேரளவிலும் கனதியான தாக்கங்களையும், செல்வாக்கினையுஞ் செலுத்தி வருகின்றமையினை ஆராய்ந்து விளங்கிக்கொள்ள முடிகின்றது.

உள்ளூர்ப் பண்பாட்டு மரபுகளில் உள்ளுறைந்துள்ள ஆரியப்பண்பாட்டின் உட்கூறுகளை உய்த்துணரவும் அவற்றினையிட்டுப் பகுத்தறிவுடன் சிந்திக்கவும் அவற்றை மாற்றியமைக்கவும் திராவிட இயக்கத்தின் கருத்தியல்கள் வழிப்படுத்தி வருகின்றன. நம்மை இழிவுபடுத்தும் ஆரியப்பண்பாடுகளைப் பெருமையுடன் கொண்டாடும் அடிமைத்தனத்திலிருந்து மீண்டெழுந்து சுயமரியாதையுடன் உள்ளூர்ப் பண்பாடுகளைத் தகவமைப்பதற்கான உந்து விசையை வழங்கி வருகின்றன.

குறிப்பாக உள்ளூர்க் கலை மரபுகளில் உள்ளுறைந்துள்ள ஆரியர்களின் ஆதிக்கப் பண்பாட்டின் உட்கூறுகளை இனங்கண்டு உள்ளூர்ச் சமூகங்களே அவற்றைக்கேள்விக்குட்படுத்தி பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் மீளுருவாக்கம் செய்வதற்கு திராவிடக் கருத்தியல்களும் காரணமாக இருந்து வருகின்றன.

இந்தவகையில் ஈழத்துக்கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆராய்ச்சிச் செயற்பாட்டினூடாக மீளுவாக்கம் செய்யப்பட்ட கூத்துப்பனுவல்களின் உருவாக்கத்தில் திராவிடக் கருத்தியல்களின் செல்வாக்குகள் தொடர்பாக இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

## கூத்துமீளுருவாக்கம்

நம் கலைகள் முழுவதும் ஆரியர் கலப்பாகி விட்டதுடன் இலக்கியங்கள், இலக்கணங்கள் கூட ஆரிய கலப்பாகவே ஆகிவிட்டன எல்லாத்துறைகளிலும் ஆரிய ஆதிக்கம் அகல நீங்கள் பாடுபட வேண்டும் என்பதுதான் தமிழ் இளைஞர்களாகிய உங்களுக்கு எனது வேண்டுகோள் எனத்தந்தை பெரியார் அவர்கள் 1950 களில் அறைகூவல் விடுத்தார் (Thanthai Periyar, 1940). இந்தக் கோரிக்கையினை முன்னெடுக்கும் செயற்பாடுகளுள் ஒன்றாகவே ஈழத்தின் கூத்து மீளுருவாக்கமும் நடந்தேறி வருகின்றது எனலாம்.

இலங்கைக் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினைச் சேர்ந்த விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் அவர்கள் தன்னுடைய முதுதத்துவமாணி பட்டத்திற்கான ஆய்வுச் செயற்பாடாக, மட்டக்களப்பிலுள்ள நீண்ட வடமோடிக்கூத்துப் பாரம்பரியங்களைக் கொண்ட கிராமங்களுள் ஒன்றாகவுள்ள சீலாமுனைக் கிராமத்துக் கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து மேற்கொண்ட கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு புதிய பார்வையில் எமது பாரம்பரிய அரங்குகளின் மீளுருவாக்கம் குறித்த அறிவியலைச் செயலாகவும் கொள்கையாகவும் முன்வைக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது (Gowreeshwaran, 2007).

ஈழக்கூத்தரங்க ஆய்வறிவு வரலாற்றில் முதன்முதலாகக் கூத்துமீளுருவாக்கம் என்பதை முன்மொழியும் இவ்வாய்வு 2002/2003 ஆம் வருடங்களில் ஈழத்தின் மட்டக்களப்பிலுள்ள சீலாமுனை எனும் ஊரிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஜெயசங்கர் கூத்தை அதனை ஆடும் மக்களைக் கொண்டு சமூக அரங்காக மாற்றி கூத்தை மீளுருவாக்கும் வகையில் தன் ஆய்வை மேற்கொண்டுள்ளார்'. 'சீலாமுனை எனும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு வாழும் மரபுவழிக் கலைஞர்களுடனும், அக்கிராம மக்களுடனும் இணைந்து தம் ஆய்வை இவர் மேற்கொண்டுள்ளார்' (Mouna Guru, 2007).

அதாவது பாரம்பரியமான கூத்துக்களைச் சமகால நோக்கில் அதை முன்னெடுத்துவரும் சமூகத்தவரின் பங்குபற்றுகையுடன் மீளுருவாக்குவதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்காரணமாக பங்குகொள் ஆய்வு முறை இதில் பயன்படுத்தப்பட்டது. இதனால் கூத்தினை முன்னெடுத்து வரும் சமூகத்தின் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படும் ஏது நிலைகள் உருவாக்கம் பெற்றன. இதனையே பின்வரும் ஆய்வாளர்தம் குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

பாரம்பரிய அரங்கினைப் புத்துருவாக்கம் செய்வதென்பது அதனைத் தலைமுறை தலைமுறையாக ஆடிவரும் சமூகக் குழுமத்தின் சிந்தனை மாற்றத்தினூடேயே முழுமையானதாகிறது. கூத்தரங்கின் புத்துருவாக்கம் பற்றிய சிந்தனை அதனைப் பேணி வரும் சமூகக் குழுமத்தின்

சிந்தனைமாற்றம் சமூகமாற்றம் பற்றியதாகவே இருக்க முடியுமென நம்புகிறேன் (Jaisankar, 2003). 'கூத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மாற்றம் என்பது அதனை ஆடும் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்துடனேயே சாத்தியமாகும்' (Jaisankar, 2003).

'கூத்து மீளுருவாக்கம் என்பது காலங்காலமாகக் கூத்தை ஆடிவருபவர்களுடன் இணைந்து கூத்தை சமகாலத்திற்குரியதாக ஆக்குவதாகும். இங்கு கூத்து என்பது செயற்பாடாக முன்னெடுக்கப்படுகின்றது. கூத்தில் ஏற்படுத்தும் மாற்றம் அதை ஆடி வரும் சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றத்துடன் தொடர்புபடுகிறது. கூத்து இங்கு கலை என்பதற்கும் அப்பால் தொடர் கலைச்செயற்பாடாகின்றது. சமுதாய அரங்காக மீளவும் மளிர்விக்கப்படுகின்றது. சுயாதீனமான சமூக உருவாக்கத்திற்கான கலைவழிச் செயற்பாடாகப் பரிணமிக்கின்றது' (Mouna Guru, 2007).

எனவே கூத்து மீளுருவாக்கம் என்பது காலங்காலமாக பிற்போக்குத்தனமான சிந்தனைகளுக்குள் மூழ்கடிப்புச் செய்யப்பட்டுள்ள சமூகங்களை அதிலிருந்து மீண்டெழச் செய்வதற்கான கலையாக்கத்தை மையப்படுத்திய ஒரு சமுதாயச் செயற்பாடாகத் தன்னை வெளிக்காட்டி நிற்கின்றது. இதனையே தந்தை பெரியார் பின்வருமாறு விளக்குகின்றார்.

'நாம் வளர்ச்சியடைய வேண்டுமானால், நாம் சிலவற்றை அழித்து, புதுப்பித்துத் துணிச்சலோடு காரியங்கள் செய்ய வேண்டும். அவைகள் எல்லாம் சீக்கிரம் மாறுதல் அடையும் படியாகச் செய்தல் வேண்டும். அந்தமாதிரி உலகில் மனித சமுதாய வளர்ச்சியைப் பார்த்தோமானால் உலக சமுதாயத்திற்கும் நம்முடைய சமுதாயத்திற்கும் தேவையான ஒரு துறை இலக்கிய மன்றம், இலக்கியச்சார்பு என்று இருக்கிறது.' (Thanthai Periyar, 1969).

## உள்ளூர்ப் பண்பாடுகளிலிருந்து ஆரிய மயமாக்கலை கேள்விக்குட்படுத்துதலின் தேவை

உள்ளூர்ச் சமூகங்கள் மத்தியில் ஆரியப்பண்பாடுகளை ஆழமாக வேரூன்றச் செய்வதில் உள்ளூர்க்கலை வடிவங்கள் மிகுந்த செல்வாக்குப்பெற்றுத் திகழ்கின்றன. உள்ளூர் ஆற்றுகைக்கலை வடிவங்கள் மிகப்பெரும்பாலும் சமுதாயக் கலை வடிவங்களாக இயக்கம் பெற்று வருவதால் காலங்காலமாகத் தலைமுறை தலைமுறையாக பார்ப்பனியக் கருத்தியல்கள் உள்ளூர்ச் சமூகத்தவரிடையே பரவலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இதிகாச, புராணக் கதைகளைப் பாடுபொருளாகக் கொண்டு உள்ளூர் நிகழ்த்து கலைவடிவங்கள் இயக்கங்கொள்வதால் ஆரியப்பண்பாடு மீளமீளப் புதுப்பிக்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வருகின்றன.

'சாதாரணமாக எல்லா மக்களும் உணரத்தக்க வகையில் சமய இலக்கியம் தான் உள்ளது. இந்த சமய இலக்கியங்கள் சாதாரண மக்களை ஏய்க்க, மடையராக ஆக்க தந்திரமாக உண்டாக்கியதானதினால் இவை காடு, மேடு, பட்டி தொட்டி எங்கும் தெரியும்படி உள்ளது. இவற்றுக்கு விளம்பரமும் அதிகம் உள்ளது. இதன் காரணமாகவே மனிதன் பேச்சுக்கு பேச்சு இராமாயாணம், பாரதத்தில் இருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுகின்றான்' (Thanthai Periyar, 1969).

எனவே உள்ளூர்க்கலை வடிவங்களில் பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் மாற்றங்களை ஏற்படுத்த முனையும் போது சமூக மாற்றத்தினை அடிமட்டத்திலிருந்து மேற்கொள்வது சாத்தியமானதாக அமைந்திருக்கும். ஆனால் நமது சூழலில் சமூக மாற்றத்திற்கான உரையாடல்கள் உள்ளூர் அளவில் உள்ளூர்க் கலைவடிவங்களின் மாற்றங்களுக்கூடான செயற்பாடுகளாக முன்னெடுக்கப்படவில்லை மாறாக காலனித்துவத்தின் பின்னர் விருத்தியடைந்துள்ள மத்தியதர வர்க்கத்தவரை மையப்படுத்திய நவீன கலை வடிவங்களுடாகவே இத்தகைய உரையாடல்கள் இடம்பெற்று வந்துள்ளன. இதனையே தமிழக, ஈழ நாடக அரங்க ஆய்வாளர்களான பிரளயனும், ஜெயசங்கரும் முறையே பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

'மரபான கதையாடல்களை மீள்பார்வை செய்து மேடையேற்றுவதென்பது தமிழ்நாட்டின் நவீன நாடகச்சூழலில் இருந்துவருகிற ஒரு விடயந்தான். ஆனால் மரபான கூத்துக்கலையில் இங்கு அப்படி எதுவும் நடந்துவிடவில்லை'.

'பாரம்பரியக் கலைவடிவங்களைப் பயின்று வருகின்ற சமூகங்களை வலுப்படுத்தும் வகையிலும் சமுதாயமயப்படுத்தும் வகையிலும் மீளுருவாக்கம் செய்வதன் மூலம் கலையைச் சமகாலத்திற்குரியதாக ஆக்கும் வகையிலும் அதைப்பயின்று வரும் மக்களை சமகால உலகை எதிர்கொள்ளத்தக்க வகையிலும் சுயாதீனமானவர்களாக வாழத்தக்க வகையிலுமான சமூக மாற்றமொன்றைப் பற்றிய சிந்தனையோ சிந்தனைக் கீற்றோ அரை நூற்றாண்டு கால கூத்துக் கற்கைகள் வரலாற்றில் அடையாளங் காண முடியாததொன்றாக இருக்கிறது' (Jaisankar, 2003).

பெருந்திரளான மக்களிடையே இதிகாச, புராணக் கதைகளூடாக ஆழ வேரூன்றியுள்ள ஆரியப்பண்பாட்டு நடைமுறைகளைக் கட்டவிழ்த்து கேள்விக்குள்ளாக்கி பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான உரையாடல்களை முன்னெடுக்கக் கட்டாயம் உள்ளூர்க் கலைவடிவங்களிலிருந்து உரையாடல்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இல்லையேல் பெரும்பாலும் பகுத்தறிவும் சுயமரியாதையும் பெரியாரியமும் படித்த நவீன மத்தியதர மக்களுக்குரியதாக மட்டுமே பெரும்பாலும் இருந்துவிடும்.

## கூத்து மீளுருவாக்கமும் திராவிடச் சிந்தனைகளும்

இப்பின்னணியில் உள்ளூர் அளவில் பாரம்பரியக் கூத்தினை முன்னிறுத்தி பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் சமூக மாற்றத்துக்கான சிந்தனைகளை உரையாடலுக்குக் கொண்டுவந்த செயற்பாடாக ஈழக்கூத்து மீளுருவாக்கம் விளங்குகின்றமை இங்கு கவனிப்பிற்குரியதாக இருக்கின்றது. 'இன்று நம்மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கூத்துக்கள் கூறும் கதைகளான புராண, இதிகாச மற்றும் அரச குலத்தவர்களது கதைகள் அனைத்தும் சமஸ்கிருத மயப்பட்ட ஆணாதிக்கக் கருத்தியல்களால் கட்டமைக்கப்பட்டவைகளாக உள்ளன என்பதை இவ்வாய்வு சுட்டுகின்றது' (Gowreeshwaran, 2007).

இவ்வாறு சுட்டிக்காட்டும் அதேவேளை உள்ளூர்க் கலைஞர்களின் பங்குபற்றுகையுடன் இத்தகைய கட்டமைப்புக்களை கட்டவிழ்த்து மீளுருவாக்கியும் முன்னெடுத்தும் வருகின்றது. சீலாமுனை கூத்து மீளுருவாக்கத்தில் பங்குபற்றிய உள்ளூர்க் கலைஞர்களுள் ஒருவரான அவர்கள் கூறும் பின்வரும் கருத்துக்கள் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

'கூத்த நல்லா ஆடினா பாடினா மட்டும் போதாது அதில சொல்லப்படுற விசயங்களையும் கவனிக்கொணும் என்று விளங்கி கூத்தை மாத்தியமைப்பமே என்று எல்லாரும் சேர்ந்தம். கூத்தில மாற்றம் செய்யிறதெண்டுறது கூத்த கூத்தில்லாம செய்யிறதில்ல. கூத்திர அடிப்படைய மாத்தாம, அதேநேரம் கட்டாயம் மாத்தவேண்டிய கருத்துக்களை மாத்தி மீள உருவாக்கிறதுதான் அது', 'நம்ம வழமையா ஆடிவார கூத்தைப் பார்த்தா, அதில ஒருசில சாதியினரை உயர்த்தியும் ஒருசில சாதியினர குறைச்சும் பார்க்கிற நிலைமையிருக்கு. உதாரணமா கூத்தில வாற பறையர் பாத்திரத்த எடுத்துப்பார்த்தா, குடிச்சி வெறிச்சித்து ஏதோ புலம்பிற இழிவான பாத்திரமாத்தான் சொல்லியிருக்காங்க. நாமளும் அதையே திரும்பத் திரும்ப ஆடிவந்திருக்கம். நாங்க எல்லாப் பாத்திரத்தையும் போல பறையர் பாத்திரத்தையும் கௌரவமான ஒன்றா மீளுருவாக்கினம். இதேபோல பெண்களை அடக்கி ஒடுக்கி அவங்கள ஒரு பொம்மையா நடத்துறது. அவங்கள பாலியல் பண்டமா சித்தரிக்கிறது, ஆண்கள் தங்கட விருப்பத்திற்கேற்ப நடத்துறதுதான் கூத்திலயும் இருக்கு. ஆம்பிளயலே கூத்துக்கள அதிகம் எழுதினது, பொம்பிளப் பாத்திரங்களைக்கூட அவங்களே ஆடி வந்ததால இப்பிடிச் செய்ய லேசா இருந்திருக்கு போல. நாங்க இப்பிடியான விசயங்களை கதைச்சி விளங்கி பொருத்தமா மீளுருவாக்கினம்' (Vivekanantharajah, 2012).

இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை 'இலக்கியம் என்றால் யாரோ நான்கு பேர் பாடின கவி இருக்கிறது, ரொம்ப பெரிய காலத்துக்கு முன்னே அற்புதமான கருத்துக்களைப் புகுத்தியிருக்கிறார்கள் என்பது மாத்திரம் போதாது. இலக்கியம் என்றால் நமக்கு என்ன அதனாலே பலன்? நாம் அதைப் பின்பற்றி நடக்க முடிகிறதா? அல்லது நம்மை அது பின்பற்றும்படியாகவாவது கட்டாயப்படுத்தும் படியான சக்தி இருக்கிறதா? அத்தோடு மாத்திரமல்லாமல் அது இன்றைக்கு

மக்களுக்குப் பயன்படுகிறதா? இவைகளை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும். என்று தந்தை பெரியார் சுட்டிக்காட்டுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது (Thanthai Periyar, 1957).

மேலும் தந்தை பெரியார் அவர்கள் 'நமது புலவர்கள் என்பவர்கள் இதிகாசங்களில் உள்ள குறைபாடுகள், குற்றங்கள், அசிங்கம், ஆபாசத்தை வெளிப்படுத்த வேண்டாமா? இராமாயாணம் தமிழ் மக்களைத் தென்னாட்டவரை இழிவுபடுத்த ஏற்பட்ட காவியம் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டாமா? பிழைப்பு கருதி தள்ளிக் கொண்டே போனால் நாட்டு மக்கள் கதி என்ன ஆவது? (Thanthai Periyar, 1969).

நம்புலவர்கள் புராண சாஸ்திர இதிகாசங்களை நன்றாகப் படித்து ஆராய்ந்து அதிலிருக்கும் தமிழனுக்கு அறிவுக்குப் பயன்படாத குற்றங்களை எடுத்துச் சொல்லி மக்களைத் திருத்தப்பாடுபட முன்வர வேண்டும். நூல் எழுத வேண்டும். என்று சமூக மாற்றத்துக்குப் பாரம்பரியமான புலவர்களின் பங்களிப்புக்கள் தொடர்பாக வலியுறுத்துகின்றார் (Thanthai Periyar, 1969).

இத்தகைய மாற்றம் கூத்து மீளுருவாக்கத்தின் அடிநாதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினை நாங்கள் அவதானிக்க முடிகின்றது. சீலாமுனைக் கூத்து மீளுருவாக்கத்தில் பங்குபற்றிய ஏட்டண்ணாவியாரான செல்லையா சிவநாயகம் அவர்கள் இதனைப் பின்வருமாறு விபரிக்கிறார்.

'1990 ஆம் ஆண்டில் நாங்கள் தர்மபுத்திரன் என்னும் கூத்தை அரங்கேற்றியபோது அதன் கதை ஓட்டத்தின் கரு தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடைபெற்ற யுத்தமென்றும் பாண்டவர்கள் எல்லா விடயங்களிலும் தர்மவான்கள் என்றும் கௌரவர்கள் எல்லா விடயங்களிலும் அதர்மவான்கள் என்றும் சித்தரித்திருந்தோம். இதுவே காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்த கதை. பாரதக்கதை பற்றிய புதிய சிந்தனைகள், ஏற்பட்ட பிற்பாடே அக்கதைகளில் உள்ள சில ஒடுக்குமுறைகள் எங்களுக்குப் புரியத்தொடங்கியது. இச்சிந்தனைகள் மூலமாகப் பிறந்ததே சிம்மாசனப்போர் என்ற வடமோடிக் கூத்தாகும். சிம்மாசனப்போர் என்ற கூத்தின் பாடல்களை நான் எழுதத் தொடங்கிய போது புதிய சிந்தனைகளால் சாதிகளைக் குறிப்பிட்டு இழிவுபடுத்தப்பட்ட பாடல்களை முற்றாக நீக்கினேன்.'

'பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்டம் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்த போராட்டமல்ல அரசு உரிமைக்கே நடந்த போராட்டமாக கதையைச் சித்தரித்து இப்போராட்டத்தினால் அனேகமாக அப்பாவி மக்களே அநியாயமான மரணங்களைத் தழுவிக் கொண்டனர் போன்ற சம்பவங்களை சித்திரித்துக்காட்டியது. இக்கொடிய யுத்தம்தான் நேர்மையான முறையில் நடைபெற்றதா என்றால் அதுதான் இல்லை. யுத்தம் ஆரம்பமாகும் முதலே மாயவன் தந்திரத்தால் அரவானைக் களப்பலி கொடுத்தது துவக்கம் துரியோதனனை யுத்ததர்மம் மீறி வீமன் நாபிக்கும் கீழ் அடித்துக் கொன்றதுடன் முடிவடைந்த யுத்தத்தில் எத்தனை யுத்ததர்மங்களை இரு பகுதியாருமே மீறினார்கள்' (Sivanayagam, 2007).

மேற்படி கூத்துமீளுருவாக்கச் செயற்பாட்டில் கூத்துப்பனுவல்களை உருவாக்குவதில் பிரதான பங்களிப்பு வழங்கி வரும் ஏட்டண்ணாவியாருடைய நிலைமாற்றம் தந்தை பெரியார் திராவிடச் சிந்தனைகளைப் பரவலாக்குவதற்குப் பெரும் சவாலாகக் காணப்பட்ட உள்ளூர்ப் புலவர்கள் தொடர்பில் கொண்டிருந்த எதிர்பார்ப்பை நடைமுறைக்குக் கொணர்ந்த ஒரு குறிப்பிடத்தக்க செயற்பாடு எனலாம்.

அதாவது 'நமது புலவர்கள் தாங்கள் படித்த புலமையினைக் கொண்டு பிழைக்கின்றார்களே ஒழிய, புலமையை உபயோகித்து இலக்கியங்களில் உள்ள குறைபாடுகளை, ஆபாசங்களை வெளியாக்கிக் காட்டவோ, புதிய இலக்கியங்கள் உண்டாக்கவோ முற்படவேயில்லை.' (தந்தை பெரியார், 1963) 'நமது சமய இலக்கியங்கள் எல்லாம் நமது புலவர்களை மட்டுமல்ல படிக்கின்ற, கேட்கின்ற மக்களையும் முட்டாள்களாக ஆக்கி விட்டன. இவைகள் அறிவுக்குச் சம்பந்தம் இல்லாதவைகளாகவும், ஒழுக்கத்துக்கு இடம் இல்லாதவைகளாகவுமே இருக்கின்றன. இந்த லட்சணத்தில் பக்தியில் வேறு இணைத்துப்போட்டு விட்டார்கள். கடவுள் இலக்கியமானாலும் தவறைத் தவறு என்று எடுத்துக்காட்ட எந்தப்புலவரும் துணிந்து வருவதில்லை', 'வால்மீகி இராமாயாணத்தினை இன்று எடுத்துச்

சொல்லுகிறவர்கள் அவற்றில் உள்ள குறைபாடுகள், அசிங்கம், ஆபாசங்களை மூடி மறைத்துக் கூறுகின்றதையே தொழிலாகக் கொண்டு வருகின்றார்கள்' (Thanthai Periyar, 1969).

என்ற தந்தை பெரியாரின் ஆதங்கத்தை கருத்திற்கொண்டு அதனை நீக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கூத்துமீளுருவாக்க நடவடிக்கைகளின் சாட்சியமாகவே மேற்படி ஏட்டண்ணாவியாரின் கூற்றும் அவரால் உருவாக்கப்பட்டு வரும் புதிய கூத்துப்பனுவல்களின் மீளுருவாக்கங்களும் வெளிப்படுத்தி வருகின்றன.

இவ்வாறு ஏட்டண்ணாவியாரில் (உள்ளூர்ப் புலவரில்) ஏற்பட்டுள்ள கருத்தியல் மாற்றமானது தனியாக நடைபெற்ற மாற்றமன்று இது குழுநிலையிலான உரையாடல்கள், விவாதங்கள் ஊடாக இடம்பெற்ற மாற்றமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க மற்றுமொரு விசேட அம்சமாகும். இதனை ஏட்டண்ணாவியாருடைய கீழ்வரும் குறிப்பு உறுதிப்படுத்தி நிற்பது நோக்கத்தக்கது.

'அப்பாடல்களைத் திருத்துவதற்காக அவர்களும், நானும், கூத்தில் பல அனுபவங்களைப்பெற்ற பல அண்ணாவிமார்களும், மூத்த கூத்துக் கலைஞர்களும் பல பண்டிதர்களும் ஒருமித்து இருந்து ஒவ்வொரு பாடல்களையும் ஆராய்ந்து தேவையான திருத்தங்களைச் செய்து இக்கதையை மீளுருவாக்கிய செயற்பாட்டின் மூலம் உருவானதே சிம்மாசனப்போர் என்ற வடமோடிக் கூத்தாகும்' (Sivanayagam, 2007).

இவ்விதம் மீளுருவாக்கம் செய்யப்பட்ட கூத்து உள்ளூர் வெளிகளில் பலநாட்கள் களரியடிக்கப்பட்டு (பயிலப்பட்டு) பின்னர் சதங்கையணி விழாக் கண்டு அரங்கேற்றம் செய்யப்பட்டதன் ஊடாக புதிய சிந்தனைகள், புதிய பாடுபொருள் சமூகப்பரவலடையும் நிலைமைகள் மேலும் வலுவாக்கமடைந்தன. இதன் நீட்சியாக மேலும் பல புதிய கூத்துக்கள் மீளுருவாக்கம் பெற்றன அதாவது ஏற்கெனவே வேரூன்றியுள்ள ஆரியப் பண்பாட்டம் சங்களைக் கேள்விக்குட்படுத்திய 'அபிமன்யு இலக்கணன்வதம்', 'சீதை சூர்ப்பனகை வதை', 'அல்லியின் எதிர்வாதம்' முதலிய கூத்துக்கள் உருவாக்கம் பெற்றன.

இச்செயற்பாட்டின் அடுத்த பாய்ச்சலாக இதிகாச, புராணக் கதைகளை விடுத்து உள்ளூர் வரலாறுகளை, பகுத்தறிவு மிகுந்த உள்ளூர்க் கதைகளை, தமிழ் குறுநில அரசர்களை, உள்ளூர் ஆளுமைகளின் வரலாறுகளை பாடுபொருளாகக் கொண்ட கூத்துப்பனுவல்கள் மீளுருவாக்கப்பட்டும், புதிதாக ஆக்கப்பட்டும் அவை பயிலப்பட்டு அரங்கேற்றப்படும் நிலைமைகள் வலுவடைந்து வருகின்றன.

## முடிவுரை

இவ்விதமாக ஈழக்கூத்து ஆய்வு வரலாற்றில் 2002/2003 காலப்பகுதில் முன்மொழியப்பட்டு தொடரப்பட்டு வரும் கூத்து மீளுருவாக்கம் எனும் ஆய்வுச்செயற்பாடு சமூக மட்டத்தில் வேரூன்றியுள்ள பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் எதிரான பண்பாட்டுப் பயில்வுகளை கேள்விக்குள்ளாக்கி அவை தொடர்பான சிந்தனைகளை எழச்செய்து அவற்றிலிருந்து மனிதர்களை விடுவித்தலுக்கான சமூகமாற்றத்திற்குரிய ஆக்கபூர்வமான ஒரு நடைமுறையாக அமைந்துள்ளது என்பதைக் கண்டுகொள்ளும் அதேவேளை இக்கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டினூடாக திராவிடக் கருத்தியல்கள் சமூகத்தின் அடிமட்ட மக்களிடையே உரையாடப்படுவதற்கும் சிந்தனைகளில் ஆழ வேரூன்றுவதற்கும் வாய்ப்புக்களை அதிகரித்துள்ளன என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. எனவே இன்றைய நவதாராளவாத நுகர்வுப்பண்பாட்டுச் சூழலில் மதஅடிப்படைவாதச் சிந்தனைகளும், அதற்கு வலுச்சேர்க்கும் பிற்போக்குத்தனமான மூடக்கருத்தியல்களும் மிக வேகமாகப் பரவலாக்கம் செய்யப்படும் பின்னணியில் சாதாரண வெகுமக்களைப் பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் சிந்தித்துச் செயலாற்றச் செய்யும் பொறிமுறைமைகளைக் கொண்ட செயற்பாட்டைப் பிரதானப்படுத்திய கூத்து மீளுருவாக்கத்தை ஊர்கள் தோறும் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது எனலாம்.

## References

Gowreeshwaran, T., (2007) Seelamunai Kuthu Meelaruvakkam Anupavapagarvu, Saratha Pathippagam, Chennai, India.

Jaisankar, C., (2003) Seelamunai Kuthu Meelaruvakkathirkana Pangukol Aaivu Seryarpadu, Chennai, India.

Mouna Guru, C., (2007) Nadagam Arangilum Palaiyathum Puthiyathum, Kumaran Puthaga Nilaiyam, Chennai, India.

Sivanayagam, (2007) Kuthu Meelaruvakkathirkana Anupava Pagirvu, Colombo, Srilanka.

Thanthai Periyar, (1940) Thanthai Periyar Sinthanai Kalanchiyam, Dravidar Kazhagam, Erode, India.

Thanthai Periyar, (1969) Ilakkiyam Valarchikku Uthava Vendamaa, Dravidar Kazhagam, Erode, India.

Vivekanantharajah, (2012) Kuthu Meelaruvakkathirkana Anupava Pagirvu, Colombo, Srilanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License